5th November 1966]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) தல அதிகார மன்றங்களின் கீழ் (பஞ்சாயத்து யூனியன்களின் கீழும் நகராட்சிகளின் கீழும்) உள்ள இந்திய மருத்துவ அல்லது நாட்டு மருத்துவ மருந்தகங்களில் பணியாற்றும் L.I.M., G.C.I.M. தகுதி பெற்ற மருத்துவ அதிகாரிகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 50 (ஐம்பது மட்டும்) இழப்பீட்டுப்படி வழங்க அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. ஷ இழப்பீட்டுப்படி வழங்குவதற்குரிய செலவைச் சம்பந்தப்பட்ட தல அதிகார மன்றங்களே ஏற்க வேண்டும்; அதற்காக அரசாங்கத்திடம் இருந்து மானியம் எதையும் கேட்கக்கூடாது என்கிற நிபந்தனைக்குட்பட்டே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. வை. சங்கரன்: பொதுவாக, எல்.ஐ.எம்., ஜி.ஸி.ஐ.எம். படித்தவர்களை அரசாங்கம் ஒரே மாதிரி பாவிக்கிறது. அப்படியிருக்கும்போது, ஜி.ஸி.ஐ.எம். படித்தவர்களுக்கு இன்டென்சிபைடு கோர்ஸ் அளிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும்போது, எல்.ஐ.எம். படித்தவர்களுக்கு அதுபோன்ற சலுகை வழங்கப்படாததற்குக் காரணம் என்ன? அவர்களுக்கும் அந்தச் சலுகை வழங்கப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: எல்.ஐ.எம். படித்தவர்களுக்குக் கண்டென்ஸ்டு கோர்ஸ் வேண்டுமென்று கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்த பிறகுதான் ஒரு முடிவுக்கு வர முடியும்.

கூட்டுறவுச் சங்கங்கள்

* 454 கேள்வி.—**திரு. எஸ் ஜே. ராமசாமி:** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரக்கோணம் தாலுகா (வடார்க்காடு மாவட்டம்) தணிகை போளூர் கிராமத்தில் உள்ள கூட்டுறவு பண்டகசாலையில் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பணம் கையாடல் செய்யப்பட்டிருப்பது சம்பந்தமாக யாரேனும் கைது செய்யப்பட்டார்களா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி: 'கூட்டுறவு பண்டகசாலை' என்று நான் தவறாக கேள்வி கொடுத்துவிட்டேன். அதைச் சாக்காக வைத்துக்கொண்டு, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார். அப்படிச் சொல்லக் கூடாது. அமைச்சர் அவர்களுக்குத் தகவல் வந்திருக்கும். 'க்ரெடிட் சொஸைட்டி' பற்றித்தான் நான்

[5th November 1966

கேள்வி போட விரும்பியது. கூட்டுறவு க்ரெடிட் சொசைட்டியில் எவ்வளவு பணம் மோசடி செய்யப்பட்டது? தலைவர் எங்கே இருக்கிறார் என்று கண்டுபிடிக்கப்பட்டதா? அவரிடமிருந்து பணம் வசூலிக்கப்பட்டதா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: அந்தக் கூட்டுறவு க்ரெடிட் சொசைட்டி பற்றித் தகவல் வேண்டுமானால், தனியாகக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்கலாம்.

* 455 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி:** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டம், அரக்கோணம் தாலுகா சிறணமல்லி கிராமத்தில் இருக்கும் (G. 1837) பலநோக்கு நாணயச் சங்கத்தில் இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் பணம் மோசடி சம்பந்தமாக அதன் தலைவர் தலைமறைவாகி விட்டது உண்மையா?

(இ) ஆமெனில், அவர்மீது இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

(உ) மோசடி செய்யப்பட்ட ரூபாய் எவ்வளவு? எத்தனை உறுப்பினர்கள் மோசடி செய்யப்பட்டார்கள்?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) ஆம்.

(இ) இச் சங்கத்தின் தலைவர் சென்ற இடம் தெரியவில்லை. கையாடல் மேற்கொண்டு புலன் விசாரணை செய்வதற்காகவும், சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்காகவும் அவ்வழக்கு போலீசில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கையாடலில் சம்பந்தப்பட்டவர்களின் சொத்துக்களை நிபந்தனை ஜப்தி செய்வதற்கும், கையாடல் செய்த தொகையைத் திருப்பிப் பெறுவதற்காக வழக்கு (surcharge proceedings) தொடரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(உ) கையாடப்பட்ட மொத்தத் தொகை ரூ. 40,700 (நாற்பதாயிரத்து எழுநூறு ரூபாய் மட்டும்). இதனால் பாதிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை 55 (ஐம்பத்தைந்து).,

திரு. எஸ். ஜே. ராமசாமி: இச் சங்கத்தில் சம்பந்தப்பட்ட ஒரு நபர் அகப்படவில்லை என்று சொன்னார்கள். இப்பொழுது அவர் வந்துவிட்டிருக்கிறார். அவரிடமிருந்து பணம் வசூல் செய்யப்பட்டதா? இந்தக் கேள்விக்குப் பதில் தயாரிக்கப்பட்டதற்குப் பிறகு மேற்கொண்டு தகவல் வந்திருந்தால், அதை அமைச்சர் அவர்கள் சொல்ல முற்படுவாரா?

கனம் சபாநாயகர்: 'லேடஸ்ட் இன்ஃபர்மேஷன்' கனம் அங்கத்தினருக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. குறிப்பிட்ட நபர் ஊரில் இருப்பதாகக் கனம் அங்கத்தினர் சொல்லுகிறார். அதைப் பற்றி கனம் அமைச்சர் ஏதாவது சொல்லவேண்டுமானால், சொல்லலாம்.